# ශ්‍රී ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,073 — 1960 මාර්තු 4 වැනි සිකුරාදා — 4.3.1960

12,073 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 4 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்கக் கணக்கு விபரங்கள் .. | — |
| நீதிச சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 245 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 243 | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

L.D.—B. 49/51.

### 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்க சம்பளச் சபைச் சட்டம்

### அறிவித்தல்

1941 ம் ஆண்டின் 27 ம் இலக்க சம்பளச்சபைச் சட்டத்தின் 28 ம் பிரிவின் பிரகாரம் கள்ளு, சாராயம், வின்னரித் தொழிற் சம்பளச்சபையால் ஆக்கப்பட்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட தீர்மானங்கள் தொழில மந்திரியால் அங்கீகரிக்கப்பட்டுவிட்டனவென்று 1943 ம் ஆண்டின் 40 ம் இலக்க சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்ட அச்சட்டத்தின் 27(3) ம் பிரிவின்படி இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1960 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 1 ந் தேதியன்று இத்தீர்மானங்கள் நடைமுறைக்கு வரும்.

தொழில் மந்திரி காரியாலயம், கொழும்பு,
1960 ம் ஆண்டு பெப்ரவரி மீ 25 ந உ.

சா. ப. குமாரசிங்க,
நிரந்தரக் காரியதரிசி.

#### அட்டவணை

கள்ளு, சாராய, வின்னரித் தொழிற் சம்பளச்சபையால் ஆக்கப்பட்டு, 1946 ம் ஆண்டு மே மாதம் 24 ந் திகதி வெளிவந்த 9,560 ம் இலக்க வர்த்தமானியில் வெளிவந்த அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டு, 1946 ம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 30 ந் தேதி வெளிவந்த 9,594 ம் இல. வர்த்தமானியிலும், 1951 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26 ந் திகதி வெளிவந்த 10,312 ம் இலக்க வர்த்தமானியிலும், 1952 ம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ந் தேதி வெளிவந்த 10,345 ம் இலக்க வர்த்தமானியிலும் 1956 ம் ஆண்டு செப்றெம்பர் மாதம் 28 ந் தேதி வெளிவந்த 10,976 ம் இலக்க வர்த்தமானியிலும் பிரசுரமான அறிவித்தல்களிற் குறிக்கப்பட்டவாறு மாற்றப்பட்ட தீர்மானங்கள் மேலும் பின்வருமாறு மாற்றப்படுகின்றன.—

(1) அவ்வட்டவணையின் II ம் பாகத்திற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பாகத்தை இடுதலால் :—

"II ம் பாகம்

கள்ளு, சாராய, வின்னரித் தொழிலின் சில செய்கைமுறைகளுக்குப் பொருத்தமான துண்டு வேலைக்குரிய கீழெல்லைச் சம்பள வீதங்கள்.

| செய்கை முறை | வீதம் |
|---|---|
| தென்னை மரங்களைத் தொடுத்தல் .. .. .. | ஒவ்வொருதரமும் தொடுக்க 70 சதம் |
| கயிறுகளை மாற்றுதல் .. .. .. | ஒவ்வொருதரமும் தொடுக்க 35 சதம் |
| கயிறுகளை வெட்டுதலும் நீக்குதலும் .. .. | ஒவ்வொருதரமும் தொடுக்க 30 சதம் |
| மரங்களுக்கு எணிச்சட்டம் கட்டுதல் .. .. .. | 110 மரங்களுக்கு மேற்படாத தோப்பு ஒன்றுக்கு ரூபா 35 |
| தவறணைகளுக்குக் கள்கு கொடுப்பதற்காக தென்னை, கித்தில் அல்லது பனை மரங்களைச் சீவுதல்— | |
| காலி மாவட்டத்தில் .. .. .. | தொழிலாளர் கொடுக்கும் ஒவ்வொரு கலன் கள்ளுக்கும் 54 சதம் |
| மேல் மாகாணத்தில் .. .. .. | தொழிலாளர் கொடுக்கும் ஒவ்வொரு கலன் கள்ளுக்கும் 61 சதம் |
| சிலாப மாவட்டத்தில் .. .. .. | தொழிலாளர் கொடுக்கும் ஒவ்வொரு கலன் கள்ளுக்கும் 64 சதம் |
| நுவரேலியா அல்லது கண்டி மாவட்டத்தில் .. .. | தொழிலாளர் கொடுக்கும் ஒவ்வொரு கலன் கள்ளுக்கும் 65 சதம் |
| மாத்தறை, யாழ்ப்பாண அல்லது மாத்தளை மாவட்டத்தில் .. | தொழிலாளர் கொடுக்கும் ஒவ்வொரு கலன் கள்ளுக்கும் 72 சதம் |
| புத்தள, இரத்தினபுரி அல்லது அம்பாந்தோட்டை மாவட்டத்தில் .. | தொழிலாளர் கொடுக்கும் ஒவ்வொரு கலன் கள்ளுக்கும் 77 சதம் |
| பதுளை, இரத்தினபுரி, குருநாக்கல் அல்லது கேகாலை மாவட்டத்தில் .. | தொழிலாளர் கொடுக்கும் ஒவ்வொரு கலன் கள்ளுக்கும் 80 சதம் |
| திருக்கோணமலை, மட்டக்களப்பு, மன்னார் அல்லது முல்லைத்தீவு மாவட்டத்தில் | தொழிலாளர் கொடுக்கும் ஒவ்வொரு கலன் கள்ளுக்கும் ரூபா 1.05 |

| செய்கை முறை | வீதம் |
|---|---|
| வடிசாலைகளுக்குக் கள்ளுக் கொடுப்பதற்காக அல்லது வின்னாரி தயாரிப்பதற்காக தென்னை, கித்தில் அல்லது பனை மரங்களைச் சீவுதல் | தொழிலாளர் கொடுக்கும் ஒவ்வொரு கலன் கள்ளுக்கும் 41 சதம் |
| வடிசாலைகளுக்குக் கள்ளுக் கொடுப்பதற்காக அல்லது வின்னாரி தயாரிப்பதற்காக பூவைச் சீவுதல் .. .. .. | 100 தென்னை, கித்தில் அல்லது பனை மரங்களுக்கு ரூ. 62. 50 ச. ; 100க்கு மேற்பட்ட ஒவ்வொரு மரத்துக்கும் 62½ சதம் |
| தவறணைகளுக்குக் கள்ளுக் கொடுப்பதற்காக பூவைச் சீவுதல் .. | 25 முதல் 40 வரையுள்ள தென்னை, கித்தில் அல்லது பனை மரங்களுக்கு ரூபா 60 |

தம்மாற் கொடுக்கப்படும் கள்ளு (கனவீதம்) நூற்றுக்கு 7·5 வீதத்துக்குக் குறையாத மதுச்சத்துக் கொண்டதாயிருத்தல் வேண்டும் என்ற நிபந்தனைக்கிசையவே சாராயத் தொழிலுக்கு அல்லது வின்னாரி தயாரித்தற்குக் கள்ளுச் சேர்த்தற்காக அமர்த்தப்பட்ட ஒவ்வொரு தொழிலாளருக்கும் தென்னை, கித்துல் அல்லது பனை மரங்கள் சீவுவதற்கென உள்ள மேலே கூறிய வீதங்கள் ஏற்புடையனவாகும். அவ்வகைக் கள்ளிலுள்ள மதுச்சத்து (கனவீதம்) நூற்றுக்கு 7·5 வீதத்துக்குக் குறைய இருந்தால், அவ்வகைக் கள்ளிலுள்ள மதுச்சத்து வீதத்துக்கும், 7·5 க்கும் என்ன தகவுப் பொருத்தம் இருக்கிறதோ அதே தகவுப்பொருத்தம் அக்கள்ளைச் சேர்த்த தொழிலாளருக்குக் கொடுபடும் பணத்திற்கும் மேற்குறிப்பிட்ட வீதத்துக்குமிருத்தல் வேண்டும்."

(2) குறித்த அட்டவணையின் III ம் பாகத்திற்குப் பதிலாக, பின்வரும் புதிய பாகத்தையிடுதலால் :—

"III ம் பாகம்

1 ம் பந்தியிற் குறிக்கப்பட்ட தொழிலாளருக்கு நேரவேலைக்குரிய கிழெல்லைச் சம்பள வீதங்கள் அவ்வத்தொழிலாளர் வகுப்புக்கு நேரே 2 ம் பத்தியிற் குறிக்கப்பட்ட வீதங்களாகும்.

எம்மாதத்திலேனும் ஒரு தொழிலாளர் உத்தரவின்றி வேலைக்கு வராத நாட்களின் தொகை நான்கிற்கு மேற்பட்டால், அவர் வேலைசெய்த நாட்களின் தொகையுடன் நான்கினைக் கூட்டியதொகைக்கும் 30 க்கும் என்ன தகவுப் பொருத்தமிருக்கின்றதோ அதே தகவுப்பொருத்தம் அவர் பெறவேண்டிய பணத்தொகைக்கும் கிழெல்லை மாதாந்தரச் சம்பள வீதத்துக்கும் இருத்தல் வேண்டும். இவ்விதம் கணிக்கப்பட்ட சம்பளத்தையே அவர் பெறவேண்டும்.

| 1 | 2 | |
|---|---|---|
| தொழிலாளரின் வகுப்பு | வீதம் | ரூ. ச. |
| பின்வரும் வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர் :— | | |
| தோப்புக் கண்காணி வேலை .. .. .. | ஒவ்வொரு மாதத்திற்கும் .. | 115 0 |
| கள்ளுத் தவறணைக் காவலாளியின் வேலை .. .. .. | ஒவ்வொரு மாதத்திற்கும் .. | 63 0 |
| சாராயத் தவறணைக் காவலாளியின் வேலை .. .. .. | ஒவ்வொரு மாதத்திற்கும் .. | 63 0 |
| தோப்புக் காவலாளியின் வேலை .. .. .. | ஒவ்வொரு மாதத்திற்கும் .. | 50 0 |
| சேர்க்கும் நிலைய மனேஜரின் வேலை .. .. .. | ஒவ்வொரு மாதத்திற்கும் .. | 85 0 |
| தவறணைகளில் கள்ளு விற்கும் வேலை .. .. .. | ஒவ்வொரு மாதத்திற்கும் .. | 80 0 |
| தவறணைகளில் சாராயம் விற்கும் வேலை .. .. .. | ஒவ்வொரு மாதத்திற்கும் .. | 75 0 |
| தொழிலின் கள்ளுப்பகுதியில், தென்னை, கித்தில் அல்லது பனை மரங்களிலிருந்து கள்ளுச் சேர்த்தல் (கள்ளுக் கொண்டுபோதல், ஏற்றுதல், இறக்குதல், பீப்பாக்கள், கள்ளுச் சாடிகள், உபகரணங்கள், மற்றும் பாத்திரங்கள் ஆகியவற்றைக் கழுவுதல் ஆகிய வேலைகள் உட்பட) .. | ஒவ்வொரு மாதத்திற்கும் .. | 80 0 |
| தொழிலின் சாராயப்பகுதியில் தென்னை, கித்தில் அல்லது பனை மரங்களிலிருந்து கள்ளுச் சேர்த்தல் (ஏற்றிச் செல்லுதலாகிய வேலையுட்பட) .. .. .. | ஒவ்வொரு மாதத்திற்கும் .. | 60 0 |
| தொழிலின் வின்னாரிப் பகுதியில் தென்னை, கித்தில் அல்லது பனை மரங்களிலிருந்து கள்ளுச் சேர்த்தல் (ஏற்றிச் செல்லுதலாகிய வேலையுட்பட) .. .. .. | ஒவ்வொரு மாதத்திற்கும் .. | 52 50 |
| வடிசாலையில் கள்ளு வடித்தல் .. .. .. | ஒவ்வொரு மாதத்திற்கும் .. | 100 0 |
| போத்தல்களில் சாராயம் விடுதலும் அடைத்தலும் லேபல் ஒட்டுதலும் .. .. | ஒவ்வொரு சாதாரண வேலை நாளுக்கும் .. | 3 0 |
| விறகுவெட்டுதலும் பிளத்தலும், வடிசாலையில் பீப்பாக்கள் கழுவும் பாத்திரங்கள், வடி பாத்திரங்கள், மற்றும் பாத்திரங்கள் ஆகியவற்றைச் சுத்தஞ்செய்தலும் கழுவுதலும் ; சாராயம் கொண்டுபோதலும், ஏற்றுதலும் இறக்குதலும் ; சாராயம் அளத்தல் ; போத்தலில் கள்ளு விடுதலும் அடைத்தலும் ; வின்னாரி தயாரித்தல் ; போத்தலில் வின்னாரி விடுதலும், அடைத்தலும் லேபல் ஒட்டுதலும் : வின்னாரியை விநியோகஞ்செய்ய ஏற்றிச்செல்லல் .. | ஒவ்வொரு சாதாரண வேலை நாளுக்கும் .. | 3 0 |

---

L.D—B. 207/41

## 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சம்பளச்சபைகள் சட்டம் 7 (1) ம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

1943 ம் ஆண்டின் 40 ம் இல. சம்பளச் சபைகள் சட்டத்தின் 3 ம் பிரிவால் திருத்தியமைக்கப்பட்ட 1941 ம் ஆண்டின் 27 ம் இல. சம்பளச் சபைகள் சட்டத்தின் 6 (1) ம் பிரிவின் பிரகாரம், தொழில் மந்திரி சந்திரதாச விஜேசிங்க ஆகிய நான், உறைநீர் (Ice), வளிநீர் (Aerated Waters) உற்பத்தித்தொழில் சம்பந்தமான கட்டளையொன்றை இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டவாறு பிறப்பிக்கவிருக்கும் எனது கருத்தை, மேற்கூறிய சட்டத்தின் 7 (1) ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இத்தால் அறிவிக்கின்றேன்.

பிறப்பிக்கவிருக்கும் கட்டளைக்கு ஆட்சேபனைகள் 1960 ம் ஆண்டு மார்ச் மாதம் 30 ந் திகதியன்று பகல் 12 மணிவரைக்கும் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் தெரிவிக்கப்படுவதோடு அவ்விதம் ஆட்சேபித்தற்கான காரணங்களைக் கூறும் ஓர் அறிக்கையைக் கொண்டதாயும் இருத்தல் வேண்டும்.

ச. விஜேசிங்க,
தொழில் மந்திரி.

கொழும்பு,
1960 ம் ஞு பெப்ரவரி மீ 24 ந் உ.

### அட்டவணை

1941 ம் ஆண்டின் 27 ம் இல. சம்பளச்சபைகள் சட்டத்தின் II ம் பாகத்தின் ஏற்பாடுகள் பின்வரும் தொழிலுக்குப் பொருந்தும் :—

உறைநீர் (Ice), வளிநீர் (Aerated Waters) உற்பத்தித் தொழில், அதாவது—

தாது வர்க்கநீர் (Mineral Waters) அல்லது வளிநீர், மதுச்சத்துச்சேராத பழரசம், சுவையூட்டிய பாணிவகை, புளியாத இனிய பானவகை, மருந்துகலந்த பானவகை, உறைநீர் (Ice) ஆகியன ;

பின்வருவனவும் இதற்குட்படும்—

(1) போத்தல் கழுவுதல் சம்பந்தமான வேலைகள் ;
(2) பாணிவகை தயாரித்தல் ;
(3) போத்தலில் இடுதலும், நிரப்புதலும், அடைத்தலும், நாமவிலாசம் ஒட்டுதலும் ;
(4) உற்பத்திக்கு முன்னும் பின்னும் போத்தல்களைக் கையாளுதல் ;
(5) மேற்கூறிய பானவகையுள் எவற்றையும் போத்தல்களில் அல்லது மற்றும் பாத்திரங்களில் விற்பதற்காகச் செய்யப்படும் மற்றும் வேலைகள் யாவும் ;

(6) உறைநீர் உற்பத்தி சம்பந்தமான வேலைகள் யாவும் ;
(7) மேற்கூறிய பானவகையும், உறைநீரும் உற்பத்திசெய்யுந்தலத்தில் அவற்றின் விற்பனை சம்பந்தமான வேலை ;
(8) மேற்கூறிய பானவகையும், உறைநீரும் ஏற்றிச்செல்லுதல், விநியோகித்தல், (உற்பத்தி செய்யும் தலமல்லாத மற்றுந்தலங்களில்) விற்றல், அத்தகைய பானவகையும் உறைநீரும் உற்பத்தி செய்யும் முயற்சியில் வேலைபார்ப்போர் (வேலை செய்யுந் தலத்தில்) வெற்றுப்போத்தல்களைச் சேகரித்தல் ஆகியன சம்பந்தமான வேலை.

ஆனால், பின்வரும் வேலையாளரின் வேலை இதற்குட்பட்டதன்று—
(1) லிகிதர், காசாளர், பண்டகசாலைப் பொறுப்பாளர், நேரக்குறிப்பாளர், ஓவசியர்மார், காவலாளிகள், பராமரிப்போர் ;
(2) 1945 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 2 ந் தேதி வெளிவந்த 9,481 ம் இலக்க வர்த்தமானியிற் பிரசுரமாகிய கட்டளையிற் குறிக்கப்பட்ட மோட்டார்ப் போக்குவரத்துத் தொழிலிலுள்ள வேலையாளர் ;
(3) 1944 ம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ந் திகதி வெளிவந்த 9,224 ம் இல. வர்த்தமானியிற் பிரசுரமாகியதும், பின்னர் மாற்றியமைக்கப்பட்டதுமான கட்டளையிற் குறிக்கப்பட்ட இயந்திரத் தொழிலிலுள்ள வேலையாளர்.

---

L.D—B. 207/41.

## 1941 ம் ஆண்டின் 27 ம் இல.
## சம்பளச்சபைகள் சட்டம்

## 7 (1) ம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

1943–ம் ஆண்டின் 40–ம் இல. சம்பளச்சபைகள் சட்டத்தின் 3–ம் பிரிவால் திருத்தியமைக்கப்பட்ட 1941–ம் ஆண்டின் 27–ம் இல. சம்பளச்சபைகள் சட்டத்தின் 6 (1) ம் பிரிவின் பிரகாரம், தொழில் மந்திரி சந்திரதாச விஜேசிங்க ஆகிய நான் மெத்தைத் தும்பு, சிலிர்த்த தும்பு ஏற்றுமதித் தொழில் சம்பந்தமான கட்டளையொன்றை இதனகத் தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டவாறு பிறப்பிக்கவிருக்கும் எனது கருத்தை மேற்கூறிய சட்டத்தின் 7 (1) ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இத்தால் அறிவிக்கின்றேன்.

பிறப்பிக்கவிருக்கும் கட்டளைக்கு ஆட்சேபனைகள் 1960–ம் ஆண்டு மார்ச்சு மாதம் 30 ந் தேதியன்று பகல் 12 மணிவரைக்கும் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் தெரிவிக்கப்படுவதோடு அவ்விதம் ஆட்சேபித்தற்கான காரணங்களைக் கூறும் ஓர் அறிக்கையைக் கொண்டதாயும் இருத்தல் வேண்டும்.

(ஒப்பம்) ச. விஜேசிங்க,
தொழில் மந்திரி.

கொழும்பு,
1960 ம் ஆண்டு பெப்ரவரி மீ 24 ந உ.

### அட்டவணை

1941–ம் ஆண்டின் 27–ம் இல. சம்பளச்சபைகள் சட்டத்தின் II–ம் பாகத்தின் ஏற்பாடுகள் பின்வரும் தொழில்களுக்குப் பொருந்தும் :—

மெத்தைத்தும்பு, சிலிர்த்ததும்பு ஏற்றுமதித் தொழில், அதாவது.—
(i) உற்பத்திசெய்த மெத்தைத்தும்பையும், சிலிர்த்த தும்பையும் பண்டகசாலையில் ஏற்றுக்கொள்ளுதல் ;
(ii) ஏற்றுமதிக்காக மெத்தைத்தும்பையும், சிலிர்த்த தும்பையும் பதப்படுத்துதலும், கட்டுதலுமாகிய முறை ;
(iii) கப்பலில் அனுப்பும்பொருட்டு மெத்தைத்தும்பையும், சிலிர்த்த தும்பையும் ஏற்றியனுப்புதல்.

பின்வருவனவும் இவற்றிற்குட்படும் :—
(அ) பின்வருவனவற்றில் ஈடுபட்டுள்ள வேலையாளரின் வேலை.—
(1) தும்பை லொறிகளிலிருந்து அல்லது வண்டிகளிலிருந்து பண்டகசாலையில் ஏற்றுக்கொள்ளுதல்;
(2) (மெத்தைத்தும்பு) (ballots) சுமைகளையும், (சிலிர்த்ததும்பு) கட்டுகளையும் கணக்கிடல் ;
(3) சுமைகளையும், கட்டுகளையும் நிறுத்தல் ;
(4) தும்பைத் தரம்பிரித்தல் ;
(5) சுமைகளையும், கட்டுகளையும் குவித்தல் ;
(6) சுமைக்குவியல்களையும், கட்டுக்குவியல்களையும் குலைத்தல்;
(7) சுமைகளையும், கட்டுகளையும், அவிழ்த்தல் ;
(8) தேவையற்ற பொருள்களை அகற்றலும், தும்பைச் சுத்தஞ்செய்தலும் ;
(9) குலைந்த தும்பைக் கட்டாக்குதல்;
(10) குலைந்த தும்பைக் காயவைத்தல் ;
(11) சுமைகளையும் கட்டுகளையும் பண்டகசாலையில் ஒரு புறத்திலிருந்து மற்றொரு புறத்துக்கு எடுத்துச்செல்லல்;
(12) சிலிர்த்த தும்பைக் கையாற் சிக்குவாங்குதலும் (அதாவது ஏற்றுமதிக்காக ஒழுங்குபடுத்துதலும்) புரிகளாகக் கட்டுதலும் ;
(13) சாயமூட்டுதற்குத் தயார்செய்யும் பொருட்டு புரிகளாகக் கட்டாது, கையால் சிக்குவாங்குதல் (அதாவது ஏற்றுமதிக்காக ஒழுங்குபடுத்துதல்) ;
(14) சாயமூட்டிய சிலிர்த்த தும்பைக் கையாற் சிக்குவாங்குதலும் (அதாவது ஏற்றுமதிக்காக ஒழுங்குபடுத்துதலும்) புரிகளாகக்கட்டுதலும் ;
(15) வெட்டிய சிலிர்த்த தும்புப்புரிகளைச் சீர்ப்படுத்துதல் ;
(16) கட்டிய சிலிர்த்த தும்புக்கட்டுகளை வெட்டுதல் ;
(17) தும்பைத் தரைமட்டத்திலிருந்து அமுக்கும் மேடைக்கு (உயர்ந்த மட்டத்திலிருப்பின்) எறிதல் ;
(18) சுத்தஞ்செய்யும் இயந்திரங்களுக்குத் தும்பூட்டுதல் ;
(19) சுமைகளாக்கும் பெட்டிகளில் தும்பையிட்டுச், சுமைகளாக்குதல் ;
(20) கயிற்றுப்புரியிலிருந்து கயிறுதிரித்தல் ;
(21) கெந்தகத்தால் தும்பின் நிறம் நீக்கல் ;
(22) தும்புக்குச் சாயமூட்டல் ;
(23) சுத்தஞ்செய்த சிலிர்த்த தும்புப்பிடிகளைக் குறிப்பிட்ட நீளத்திற்கு வெட்டுதல் ;
(24) அமுக்கும் இயந்திரத்தால் அல்லது அமுக்கும் இயந்திரமின்றித் தும்பைப் பெட்டிகளில் அடைத்துச் சிப்பங்களாக்குதல் ;
(25) அமுக்கியை (press) கட்டுப்படுத்தலும், இயக்குதலும் ;
(26) சிப்பத்தை இரும்பு வளையத்தால் அல்லது கயிற்றால் கட்டுதல் ;
(27) சிப்பங்களைக் குவித்தல், குலைத்தல், எடுத்துச்செல்லுதல், தள்ளுதல், ஏற்றுதல், இறக்குதல் ;
(28) தும்பைத் திரித்தலும் முறுக்குதலும் ;
(29) சுமைகளையும், கட்டுகளையும் அமுக்கிக்கு எடுத்துச் செல்லுதல் ;
(30) அமுக்கிப் பெட்டியில் அடைப்போருக்குத் தும்பைச் செலுத்துதல் ;
(31) தும்பு அமுக்கிய பெட்டிகளைத் தள்ளுதற்குத் தள்ளுபொறிகளை இயக்குதல் ;
(32) மூங்கில்களை அரிதலும் பிளத்தலும் ;
(33) இரும்புவளையம் வெட்டுதல் ;
(34) தும்புக்கயிற்றை நீட்டுதல் ;
(35) தும்பை (பெட்டிகளில்) அடைத்தலிலும் பதப்படுத்துதலிலும், உபயோகிக்கப்படும் சில்லறைப் பொருள்களை ஏற்றுக்கொள்ளுதல், கணக்கிடல், நிறுத்தல், குவித்தல், அகற்றுதல், வெட்டுதல், தயாரித்தல் ;
(36) அமுக்கி, மேடை, குழி, சுற்றுப்புறம் ஆகியவற்றைப் பெருக்குதலும், சுத்தஞ்செய்தலும் ;
(37) சிப்பங்களைச் சாக்கால் மூடித்தைத்தல் ;
(38) சுமைகளைக் காகிதத்தால் அல்லது சாக்கால் சுற்றுதல் ;
(39) மூடைகளைக் கப்பலில் ஏற்றியனுப்புதற்காக அடையாளமிடுதல் ;
(40) கப்பலில் ஏற்றியனுப்புதற்காக மூடைகளையெடுத்துச் செல்லல் ;
(41) உணவும், தேனீரும் தயாரித்தலும், விநியோகித்தலும் ;
(42) ஒரு கண்காணியின் வேலை ;
(43) சிக்குவாங்குதற்கு எண்ணெய் விநியோகித்தல் ;
(44) பண்டகசாலையையும், கான்களையும் பெருக்குதல் ;
(45) கயிற்றுத் தூசியையும், குப்பையையும் அகற்றுதல் ;
(46) கயிற்றுத் தூசியை அரித்தல் ;
(47) கயிற்றுத் தூசியையும், குப்பையையும் பைகளில் இடுதல் ;

(ஆ) (அ) பந்தியில் குறிக்கப்பட்டுள்ள வேலைசம்பந்தமாக அல்லது அவ்வேலையின்போது நடைபெறும் செய்கையாதாயினும் பின்வரும் வேலையாளரின் வேலை இதற்கு உட்பட்டதன்று :—
(1) லிகிதர், பண்டகசாலைப் பொறுப்பாளர், நேரக்குறிப்பாளர், சரிபிழை பார்ப்போர், ஓவசியர்மார், காவலாளிகள்.
(2) 1945 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 2 ந் தேதி வெளிவந்த 9,481 ம் இல : வர்த்தமானியிற் பிரசுரமாகிய கட்டளையிற் குறிக்கப்பட்ட மோட்டார்ப் போக்குவரத்துத் தொழிலிலுள்ள வேலையாளர்.
(3) 1949 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 16 ந் தேதி வெளிவந்த 10,054 ம் இல : வர்த்தமானியிற் பிரசுரமாகியதும், பின்னர் மாற்றியமைக்கப்பட்டதுமான கட்டளையிற் குறிக்கப்பட்ட கட்டடத்தொழிலிலுள்ள வேலையாளர்.
(4) 1944 ம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ந் தேதி வெளிவந்த 9,224 ம் இல : வர்த்தமானியிற் பிரசுரமாகியதும், பின்னர் மாற்றியமைக்கப்பட்டதுமான கட்டளையிற் குறிக்கப்பட்ட இயந்திரத்தொழிலிலுள்ள வேலையாளர்.

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### அறிவித்தல்

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் நிமித்தம், மாத்தறை டிஸ்திறிக் எல்லைக்குள் இருக்கும் அகுறஸ்ஸ, தெனியாய ஆகிய தானங்கள், 1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 18 ம் 19 ம் திகதிகளில் பொதுமக்களுக்காக திறந்து வைக்கப்படமாட்டாது.

ஏ. ஐ. மொஹிதீன்,
மாத்தறை டிஸ்திறிக் அரசாங்க அதிபர்.

**1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய திருத்தப்பட்ட கிரய விகிதங்கள்**

# " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்) "

**வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன், **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணங் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. " நகலை " கடதாசியின் **ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக "ரைப்" அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறொக்டரால் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப் படமாட்டா.

10. 1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | 5 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | 60 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 120 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி)** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

13. **ஒரு வருடத்திற்கு அல்லது அரை வருடத்திற்குரிய சந்தா, முன்பணமாக கொழும்பு அரசாங்கப் பிரசுர நிலைய அதிபரால் பதிவு செய்யப்படும்.**

14. **சந்தா விகிதங்கள்—**

| | ரூ. ச. | |
|---|---|---|
| ஒரு வருட சந்தா .. .. | 15 0 | .. ஒவ்வொரு பகுதிக்கும் |
| | 7 0 | .. ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவுக்கும் |
| ஒவ்வொரு பகுதியினதும் தனிப் பிரதி .. | 0 25 | |
| | 0 31 | .. தபாற் செலவுடன் |
| ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 10 | |
| | 0 14 | .. தபாற் செலவுடன் |

15. **கைவசமுள்ள பழைய பிரதிகளுக்கு இரட்டிப்புப் பணம் செலுத்தப்படல் வேண்டும். கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபர் அவர்கட்கு விண்ணப்பிக்கவேண்டும்.**

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது